TNMD26-000480-2021



# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SPECIAL COURT TO DEAL WITH THE CASES OF OFFENCES IN CONTRAVENTION OF THE PROVISIONS OF THE MINES AND MINERALS (D&R) ACT, 1957, MADURAI**

**************

| | | |
|---|---|---|
| Case No | : | Spl.S.C.No.14/2021 |
| Deposition of witness | : | LW 17 / PW 9 |
| Name | : | திரு. பூப்பாண்டி |
| Father's Name | : | அழகர்சாமி |
| Village | : | உத்தங்குடி |
| Taluk | : | மதுரை கிழக்கு |
| Calling | : | துணை வட்டாட்சியர் (ஓய்வு) |
| Age | : | 67/26 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2026**

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி தொடங்கிய நேரம் : 01.05 PM

**முதல் விசாரணை :**

நான் மதுரை கிழக்கு வட்டத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து தற்போது பணிநிறைவு செய்துவிட்டேன் . இதற்கு முன்பு கீழவளவு வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்தபோது வட்டாட்சியர் உத்தரவுப்படி 26.12.2012 ம் தேதி 02.00 மணியளவில் கீழவளவு அம்மன்கோவில் பட்டியில் உள்ள பி .ஆர்.பி எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்கு செல்ல வட்டாட்சியர் உத்தரவிட்டார் . அதன்படி 02.00 மணிக்கு பி .ஆர்.பி. நிறுவனத்திற்கு

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.14 17:11:02 +0530

சென்றேன். அங்கு விருதுநகர் காவல் ஆய்வாளர் வழக்கு எண் .229/2012 சம்பந்தமாக TN 59 AX 6257 என்ற எண்ணுள்ள கிரேன் பறிமுதல் செய்யவேண்டி இருப்பதால் என் முன்பாகவும், மண்டல துணை வட்டாட்சியர் பன்னீர்செல்வம் முன்பாகவும் பறிமுதல் செய்தார்கள். அதில் நானும் , பன்னீர்செல்வம் அவர்களும் கையொப்பம் செய்தோம் . என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அந்த ஆவணம் **Ex.P.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** :

எனக்கும், துணை வட்டாட்சியருக்கும் இந்த பணி சம்பந்தமாக மேலூர் வட்டாட்சியர் எழுத்துமூலமான உத்தரவு பிறப்பித்தார் என்றால் வாய்மொழி உத்தரவு பிறப்பித்தார் . 26.12.2012 ம் தேதி இந்த பணியை செய்ய செல்லும்போது எங்களது அலுவலக movement register ல் அதனை குறித்து சென்றோமா என்றால் இல்லை . நாங்கள் ஒரு அலுவல் பணி சம்பந்தமாக வெளியில் செல்லவேண்டும் என்றால் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள movement register ல் அதனை குறித்து செல்லவேண்டும் என்பது விதி என்றால் அது வட்டாட்சியர் அலுவலகத்தில் தான் உள்ளது . எனது அலுவலகம் தனியாக உள்ளது . 26.12.2012 ம் தேதி வட்டாட்சியர் உத்தரவிட்டதாக சொல்லும் நேரத்தில் நான் எனனது வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் தான் இருந்தேன் என்றால் சரிதான் . அங்கிருந்து பி.ஆர்.பி நிறுவனத்திற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் சென்றேன் . வாய்மொழி உத்தரவு என்று வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல . வாகனம் கைப்பற்றப்பட்ட ஆவணத்தில்

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.14 17:11:08 +0530

நான் எங்கு வைத்து கையெழுத்திட்டேன் என்றால் வாகனம் கைப்பற்றப்பட்ட இடத்திலேயே வைத்து கையெழுத்திட்டேன். அதனை யார் எழுதியது என்றால் அவர்கள் தட்டச்சு செய்து கொண்டு வந்தார்கள். வாகனம் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் இடத்தில் வைத்து தட்டச்சு செய்யப்படவில்லை என்றால் சரிதான். Ex.P.2 ஆவணம் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் அலுவலக ரீதியாக கையெழுத்திடும்போது எனது அலுவலக பதவி குறித்த முத்திரையை அதில் பதிக்க வேண்டும் என்றால் சரிதான். அதுபோன்று Ex.P.2 ஆவணத்தில் நானும், என்னுடன் கையெழுத்திட்டதாக சொல்லும் துணை வட்டாட்சியரும் எங்களது பதவி குறித்து அலுவலக முத்திரை இடவில்லை என்றால் சரிதான். இந்த வாகனம் கைப்பற்றபடும்போது வழக்கில் எதிரிகளாக காட்டப்பட்ட நபர்கள் யாரும் அங்கு இல்லை என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் எங்குவைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் எனது அலுவலகத்தில் வைத்து 161 வாக்குமூலத்தை பதிவு செய்தார். நான் அங்கேயே கையெழுத்திட்டேன் என்றால் அவர் விசாரித்துவிட்டு சென்றுவிட்டார். அ.சா.8 துணை வட்டாட்சியரை அவரது அலுவலகத்தில் வைத்து விசாரித்தாரா அல்லது காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தாரா என்றால் எனக்கு தெரியாது. நான் அரசு ஊழியர் என்ற காரணத்தினால் கீழவளவு காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கீழவளவு காவல் நிலையத்தில் Ex.P.2 ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. 26.12.2012 ம் தேதி நானோ, அ.சா.8 துணை வட்டாட்சியரோ, அத்தாட்சியில் சொல்லப்பட்டுள்ள அம்மன்கோவில்பட்டியில் உள்ள பிஆர்பி நிறுவனத்திற்கு செல்லவில்லை என்றும், அங்கு எந்தவிதமான வாகனங்களும் எங்கள் முன்னிலையில்

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.14 17:11:14 +0530

ஆய்வாளரால் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல . எங்கள் முன்னிலையில் எந்தவிதமான வாகனமும் கைப்பற்றப்படவில்லை என்றும் , அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல . பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் பெறப்பட்டு நான் கீழவளவு வருவாய்த்துறையில் பணிபுரிந்ததால் காவல் துறைக்கு ஆதரவாக தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி முடிவடைந்த நேரம் : 01.25 PM

(ஒம்./-)******

சாட்சியால் திறந்த மன்றத்தில் சாட்சியமளிக்கப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.14 17:11:20 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான
குற்ற வழக்குகள் தனி சிறப்பு நீதிமன்றம்,

மதுரை.